# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550


UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

அக்டோபர் – 2018

21



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

# பொருளடக்கம்


1. திரிகடுகத்தில் வாழ்வியல் சிந்தனைகள்
*முனைவர் க.சகாய கிரேஸி - 1

2. நாலடியார் காட்டும் வாழ்வியல்
*முனைவர் அ.ஜான்சிமேரி - 4

3. குறுந்தொகை காட்டும் முல்லைத் தலைவி
*முனைவர் சௌ.ஜான்சிராணி - 7

4. சங்க இலக்கியங்கள் கட்டும் இறப்புகுறித்த வாழ்வியல் நிகழ்வுகள்
*முனைவர் ஜெ.அருள் இருதய ஜெயந்தி - 10

5. திருக்குறள் காட்டும் மனித மாண்புகள்
*முனைவர் தே.ராஜசீலி - 13

6. இயேசு காவியத்தில் வாழ்வியல் கூறுகள்
*அருட்சகோதரி முனைவர் இ.அல்போன்சாள் - 15

7. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்
*அ.கிருத்திகா - 18

8. சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்
*முனைவர் ம.தனலட்சுமி - 20

9. இனக்குழு மக்களின் வாழ்வியல் சிந்தனையில் வேட்டையாடுதலும் - பாதீடும்
*முனைவர் க.குமரகுருபரன் - 22

10. இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்
*முனைவர் மா.பாப்பா - 26

11. இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்
*முனைவர் செ.ரெஜினா - 29

12. பெண் எனும் பெருந்தெய்வம் – வள்ளலார் பாரதி ஒப்பீடு
*முனைவர் நா.பா.மஞ்சுளா - 32

13. நாலடியார் நவிலும் இல்லற விழுமியங்கள்
*முனைவர் பெ.சுபாசினி - 35

14. இல்லாள் கட்டமைப்பு : நான்மணிக்கடிகையை முன்வைத்த ஆய்வு
*அ.இளவரசி - 38

15. சங்க இலக்கியங்களும் தமிழ்ச்சமூகம் சார் வாழ்வியல் நெறிகளும்
*சோ.இலக்கியா

# இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

*முனைவர் செ.ரெஜினா, தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம்.

*முன்னுரை*

தெய்வ பக்தி, தோழமை, அஞ்சாமை, தன்னடக்கம், இரக்க சிந்தனை, நற்பண்பு, நல்லொழுக்கம், கடமையுணர்வு, ஆன்மீகம், உடல், மனம், அறிவு, ஆண்மை, எளிமை, நற்சிந்தனை, நற்செயல்கள், நல்வாழ்க்கை, வாழ்க்கைப் போராட்டத்தைச் சந்தித்தல், கடவுளையும் மனிதனையும் நேசித்தல், உண்மை, பயமின்மை, தன்னலமின்மை, தாழ்மை, தியாகம், தன்னை அறிதல், ஊக்கம், பண்பாடு, கலாச்சாரம் இறைவனுக்குத் தொண்டு, மக்களுக்குச் சேவை என இவை போன்று பலவும் வாழ்வில் கடைபிடிக்கப்பட வேண்டியவை என இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

தமிழ் மக்களின் வாழ்வியலை அறிய உதவுவதும், எக்காலத்திற்கும் ஏற்புடையதும், புதுச்சிந்தனைகளைப் புகட்டுவதும் இலக்கியங்கள். இன்றைய காலக்கட்டத்தில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் இணக்கத்தோடு வாழ்கின்ற சூழல் உருவாக வேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பமாக இருக்கின்றது. ஒவ்வொரு உயிரும் தானும் தன்னைச் சார்ந்தோரும் மகிழ்ச்சியாக வாழ்ந்திட ஏதேனும் ஒருவகையில் துணைநிற்க வேண்டும் என்பதே. இச்சமுதாயத்தில் வசிக்கும் வீடும் - நாடும் கட்டிடங்களாலும் மண்ணாலும் சிறப்படைவதில்லை. அங்கு வாழ்பவர்களின் மனதைப் பொறுத்தே சிறப்படைகின்றது என்பதை அனைவரும் உணரவேண்டும். இந்த உண்மையை புறநானூற்றுப் புலவர்,

"நாடாகொன்றோ காடாகொன்றோ
அவலாகொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" (பா.187:1-4)

என்று எடுத்துக்காட்டுகின்றார். எனவே, நிலம் என்பது அங்கு வாழும் மக்களின் ஒழுக்கம், இணக்கம், செயலாண்மை ஆகியவற்றைப் பொறுத்தே அமைகின்றது. இவற்றை நம் சமுதாயம் பெறவேண்டும் என்பதே அனைவருடைய விருப்பமாக இருக்கின்றது. எனவே, இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

*வாழ்வியல் கூறுகள்*

வாழ்வியல் கூறுகள் என்பவை மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடு, கலை, கலாச்சாரம், அரசியல், பொருளாதாரம், சமயம் மற்றும் மனிதனுக்கு நல்ல எண்ணம், சகிப்புத்தன்மை, நம்பிக்கை, ஒருவருக்கொருவர் இடையூறு இல்லாமல் தனித்தும் சேர்ந்தும் வாழ்வதற்குரிய வழிமுறைகளே வாழ்வியல் நெறிகள் எனலாம். இலக்கியங்கள் ஒவ்வொரு சமயத்திற்கும், ஒவ்வொரு இடத்திற்கும், ஒவ்வொரு பிரிவினருக்கும் 'தத்தமக்கு என்று தனிப்பட்ட நெறிமுறைகளைப் பற்றிப் பேசாமல், எல்லோருக்கும் பொதுவான காலம் கடந்த நெறிமுறைகளே வாழ்வியல் நெறிகள். இன்றைய சூழலில் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியும் ஊடகங்களும் தனிமனித ஒழுக்கத்தை, சமுதாயப் பண்பாட்டை சிதைத்து வருவதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கடமை, பொறுமை, மன்னிப்பு, அன்பு போன்றவற்றை நாளுக்கு நாள் இழந்து வருகின்றோம். வாழ்வியலுக்கென்று வகுத்த இலக்கியங்களில் ஒன்று கலித்தொகை,

"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவத பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல்

செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர் வெளவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்'' (பா.எ.133)

இவ்வாறு உலகில் வாழ்வாங்கு வாழ சிறந்த பண்புகளைக் குறிப்பிட்டுள்ளது.

*குடும்பமும் அன்பும்*

குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் விட்டுவிலகாதவாறு இருக்கும் இயல்புடையவர்கள். குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் கடமை இருக்கிறது. கடமையை அவரவர் சரிவர ஆற்றும் போது வீடும் நாடும் நலம் பெறுகிறது என்பதை குறுந்தொகையில் தலைவன் தலைவி இருவரின் கடமைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார் பாலைக் கௌதமனார்,

"வினையே ஆடவர்க்கு உயிரே வான் நுதல்
மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'' (பா. 135)

என்று கடமையை சரிவரச் செய்தால் இல்லறம் சிறக்கும் என்பதை அறியமுடிகிறது.

குறுந்தொகைப் பாடலில், தலைவனும் - தலைவியும் எவ்வித உறவு முறையினராக இல்லாத போதும், வானினின்று பெய்த மழைநீரானது செந்நிலத்தோடு தானே வீழ்ந்து அதன் நிறத்தைப் பெற்றுக் கலந்தது போல, அவ்விருவரின் அன்புடை நெஞ்சங்கள் தம்முள் கலந்தன என்பதை,

"யாயும் ஞாயும் யாராகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே? '' (பா.40)

என்ற பாடல் இக்காலக் காதலைப் போல் இல்லாமல் சங்க காலக் காதல் உண்மையான அன்பினைக் கொண்டுள்ளதை மிக அழகாகக் கோடிட்டுக்காட்டியுள்ளதை அறியமுடிகிறது. எனவே, அன்பிருக்கும் இடத்தில் பண்பு இருக்கும் கோபம், பொறாமை, போட்டி இருக்காது என்பதை இலக்கியங்கள் தெளிவுபடுத்தியுள்ளது.

*நட்பு*

இன்றைய காலக் கட்டத்தில் பொய் பேசுவோர், புறங்கூறுவோர், இரட்டை வேடம் தரிப்போர், வீண் வம்பு பேசித் திரிவோர், கட்டுக்கதை கட்டுவோர், கடவுள் பயமில்லாதவர், மதம் மற்றும் அறநூல்களில் ஈடுபாடில்லாதோர், பிறரை நிந்தனை செய்வோர் போன்றோரிடம் சகவாசத்தையும், தொடர்பையும் விட்டொழிக்க வேண்டும். தண்ணீரோடு தூசி கலக்கின்றபோது அழுக்கடைந்து இருக்கும். காற்று மல்லிகைப் பூவுடன் கலந்திருக்கும்போது நறுமணம் வீசும். ஆனால், மலத்தோடு கலக்கின்றபோது அருவருப்பான நாற்றமுடையதாயிருக்கும். எனவே, நல்லோர் நட்பே சிறந்தது என்று இலக்கியங்கள் பகர்கின்றன. சங்கச் சான்றோர்களின் நட்பானது புனிதமானது. பிறரோடு பழகி மகிழ்ந்து வாழும் நட்பு வாழ்க்கையே மனிதன் விரும்பி வாழும் வாழ்க்கையாகும். ஒருவருக்கொருவர் நட்புக் கொள்வது இன்பமாகப் பேசிச் சிரித்து மகிழ்வதற்கு மட்டுமல்ல என்பதை,

"நகுதற் பொருட்டன்று நட்டங் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு'' (குறள்: 784)

என்கிறார். மேலும், "இடிக்கும் கேளிர் நும்குறை ஆக'' (குறுந்., 58)

ஒருவர் குற்றம் செய்தால் மற்றவர் அதை எடுத்துக்காட்டி இடித்துத் திருத்துவதற்கே என்ற கருத்தைத்தான் வெள்ளிவீதியார் குறிப்பிட்டுள்ளார். மேலும், அரசர்கள் - புலவர்கள் உறவு, நட்பின் ஆழத்திற்குத் தக்கதொரு சான்றாக கபிலர் மறைவுக்குப் பின் பாரி மகளிரை அழைத்துக் கொண்டு பறம்பு மலையின் நீங்கி, அம்மக்களைத் தகுந்தவரிடத்தில் மணமுடித்துக் கொடுத்து விட்டு வடக்கிலிருந்து உயிர் நீத்த கபிலர் - பாரியின் நட்பானது, எழுமையும் தொடரும் என்பது நட்புக்குச் சான்று. இச்செயல் நன்றி கலந்த நட்பை வெளிப்படுத்துகிறது. மேலும், புறநானூற்றில் கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் இவர்களின் நட்பு மாணிக்க மகுடத்தில் வைரக்கல் பதித்தாற் போன்றதாகும் என்பதை,

"சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே!
பெரியகட் பெறினே
யாம் பாடத் தான் மகிழ்ந்து உண்ணும்; மன்னே!
இனிப்பாடு நரும் இல்லை பாநர்க்கு ஒன்று ஈகுநரும் இல்லை'' (பா.235: 1-3,17)

அரிதின் முயன்று பெற்றிட நெல்லிக்கனி ஔவைக்குக் கிட்டியது ஆழ்ந்த அன்பினாலன்றோ, அதியமானின் மறைவுக்குப்பின் ஔவை பாடிய இரங்கற்பா நட்புள்ளம் கொண்ட நெஞ்சங்களை

நெகிழச் செய்கிறது. எனவே, அறிவுடையோரிடம் கொள்ளும் நட்பானது அழியாத இன்பப் பேற்றினைப் பெற முடியும் என்பதை இலக்கியங்கள் கற்றுத் தந்துள்ளதை அறியமுடிகிறது.

***அறம்***

சங்க இலக்கியங்கள் அகம் - புறம் என்று இருந்தாலும், அடிநாதமாக இருப்பது அறமே. 'அறம் செய விரும்பு', 'ஆறுவது சினம்', 'இயல்வது கரவேல்', 'ஈவது விலக்கேல்' என்று ஔவையும் கூறியிருக்கிறார். பகுத்துண்ணல், விருந்தோம்பல், ஈதல், சொன்ன சொல் தவறாதிருத்தல், விடா முயற்சி, மன வலிமை, பிறருக்காக வாழுதல், தன்மானம், அறிவுடைமை, கொடை, சினங்கொள்ளாதிருத்தல், இனிமைப் பேச்சு, பிற உயிர்களிடத்தில் அன்பு சொள்ளல், ஒற்றுமை, பொறுப்புணர்வு, பொறாமை கொள்ளாதிருத்தல், தீமை செய்யாதிருத்தல் என்று அறம் பற்றி கருத்துக்களை சொல்லிக் கொண்டே போகலாம். புறநானூற்றில் சங்கத் தமிழர்கள் நன்மைகளையே செய்து, பிறருக்குத் தீங்க செய்யாத நல்லுணர்வோடு வாழ்ந்துள்ளனர் என்பதை,

> **"நல்லது நெய்தல் ஆற்றீர் ஆயினும்**
> **அல்லது செய்தல் ஓம்புமின்"** (பா.195: 6-10)

என்று பிறருக்குத் தீங்கு செய்யாமல் வாழ்ந்த பண்பையும், அன்பினையும் காண முடிகிறது. துன்பத்திற்கான காரணத்தை அறிந்து அவனின் வாழ்க்கையினை உயர்த்துவதையே தலையாய நெறியாக சங்கத் தமிழர்கள் வாழ்நதனர் என்பதற்குச் சான்றாக உள்ளது. மேலும்,

> **"ஏழைக்கு எழுத்தறிவித்தவன் இறைவன்",**
> **"உயிரினும் சிறந்தன்று நாணே",**
> **"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்",**
> **"முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்",**
> **"நன்றி மறப்பது நன்றன்று",**
> **"அறத்தான் வருவதே இன்பம்",**
> **"மனத்துக்கண் மாசிலன் ஆதல் ",**
> **"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்",**
> **"யாதும் ஊரே யாவரும் கேளிர்",**
> **"புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்",**
> **"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு",**
> **"கல்வி அழகே அழகு"**

என்று எண்ணிலடங்கா அறச் செய்திகளை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. எனவே, அடிப்படை வாழ்வில் அறமும் உயர்வும் உரமாகப் பெற்று, தனக்கென்று சில கட்டுப்பாடுகளையும், கடமைகளையும் வகுத்துக் கொண்டு வாழ்ந்தாலும், பண்புள்ள செயல்களைச் செய்யும்போது தமது வாழ்வினை மதிப்புமிக்க வாழ்க்கையாக மாற்ற முடியும் என்பதை இலக்கியங்கள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

***முடிவுரை***

மனிதன் மனிதாக வாழ வேண்டும் என்பதை இலக்கியங்கள் போதித்து வழிகாட்டுகின்றன. இலக்கியம் கற்பதோடு மட்டுமல்லாது, வாழ்க்கையையும் கற்றுக் கொடுக்கும் காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய உன்னதப் பண்பு, உயர் கோட்பாடு - கொள்கைகள் என அனைத்தையும் எடுத்துரைத்து, மனிதன் இம்மைக்கு மட்டுமல்லாது மறுமைக்கும் புண்ணியம் கிட்டும் என்பதைத் தெளிவுபடுத்தி, தமிழ் இலக்கியங்கள் மிக அழகாகப் புனையப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.